TNPD110002532025

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 59/2025**
**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | எதிரி 08.10.2024 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 09.4.2025 |
| 3. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 29.08.2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1– 03.03.2026 / 03.03.2026<br>அ.சா.2– 03.03.2026 / 03.03.2026<br>அ.சா.3– 03.03.2026 / 03.03.2026<br>அ.சா.4– 15.05.2026 / 15.05.2026 |
| 6. | BNSS பிரிவு 351(1) ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 18.05.2026 |
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்: | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>எ.சா.1– 04.06.2026 / 04.06.2026 |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் செவ்வாய்க் கிழமை**
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆனி திங்கள் 16ம் நாள்
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 59/2025**
**(CNR NO-TNPD 11000253-2025)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி. எண். 59/2025 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கந்தர்வகோட்டை காவல் நிலையம், குற்ற எண்.314/2024 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர், கந்தர்வகோட்டை காவல் நிலையம், |
| 4 | **<u>எதிரியின் விபரம்</u>**<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | முத்து ஆனந்த முரளி, வயது 54/2024<br>த/பெ. பட்டமுத்து,<br>1796, திருவள்ளுவர் தெரு,<br>கிருஷ்ணா நகர், மெடிக்கல் காலேஸ் ரோடு,<br>நீலகிரி, தஞ்சாவூர் மாவட்டம். |
| 5 | தேதி நாள் சம்பவம் | 05.10.2024 |
| 6 | முறையீடு | 06.10.2024 |
| 7 | கைது | 08.10.2024 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 08.10.2024 |
| 9 | விசாரணை துவக்கம் | 03.03.2026 |
| 10 | விசாரணை முடிவு | 04.06.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 281, 106(1) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை குவிமுச பிரிவு 278(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | காலதாமதத்திற்கான விளக்கம் | காலதாமதம் இல்லை |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

இவ்வழக்கானது 09.04.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 30.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக **குற்றத்துறை அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1** அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.அன்புமாறன், B.Sc., B.L.,** அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 05.10.2024ம் தேதி மாலை சுமார் 06.10 மணியளவில், பட்டியல் சாட்சி–1 விக்னேஷ்வரன் என்பவரின் அண்ணனான இவ்வழக்கில் இறந்துபோன பிரகதீஸ்வரன் என்பவர் TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் கந்தர்வகோட்டை – தஞ்சாவூர் சாலையில் காடவராயன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே சாலை மற்றும் திசையில் TN 49 BS 2094 என்ற பதிவெண்ட கொண்ட Maruti Dzire காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று பிரகதீஸ்வரன் சென்ற வண்டியின் பின்னால் மோதியதில், அவருக்கு தலையில் அடிப்பட்டு அதன் மூலம் அவருக்கு இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 281, 106(1) BNSஇன் கீழ் கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு BNSS பிரிவு 230–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

4. குற்றச்சாட்டு :–

அரசுத் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக பிரிவு 281, 106(1) BNSஇன் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 13 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் எ.சா.1 விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவத்தில் காயமுற்ற தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பிரகதீஸ்வரன் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால், அவருடன் இருந்த அவரது தம்பி அ.சா.1 விக்னேஷ்வரன் என்பவர் கடந்த 06.10.2024ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–12 மார்நாடு என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.314/2024ல், சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNSஇன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

7. காவல் உதவி ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 02.30 மணியளவில் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி–7 கண்ணன் மற்றும் பட்டியல் சாட்சி–8 வீரமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 சூரியா மற்றும் அ.சா.3 சந்திரபாபு ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

8. பின்னர் வழக்கு விபத்து சம்பவத்தில் காயமுற்று சிகிச்சையில் இருந்த பிரகதீஸ்வரன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் அறிந்து வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) BNS இல் இருந்து 281, 106(1) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து, அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன பிரகதீஸ்வரன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ. 6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அ.சா.4 சுகுமாறன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

9. காவல் ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிவந்த நிலையில், 08.10.2024ம் தேதி காலை 11.15 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி முத்து ஆனந்தமுரளி என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி–9 ஜெய்சங்கர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனம்



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் வழங்கியுள்ளார்.

10. பட்டியல் சாட்சி–10 மருத்துவர் அருள்மதி என்பவர் வழக்கு விபத்தில் இறந்து போன பிரகதீஸ்வரன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களுக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், BNSS பிரிவு 330(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து, வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNSஇன் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

11. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) –ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில், வழக்கு விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் பயணித்த வடிவுகரசி என்பவர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தஞ்சாவூர் A to Z மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று (Discharge summary) சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**13. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**14. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்தவிதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

15. இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

16. அரசுத் தரப்பில், கடந்த 05.10.2024ம் தேதி மாலை சுமார் 06.10 மணியளவில், அ.சா.1இன் அண்ணனான இவ்வழக்கில் இறந்துபோன பிரகதீஸ்வரன் என்பவர் TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் கந்தர்வகோட்டை – தஞ்சாவூர் சாலையில் காடவராயன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே சாலை மற்றும் திசையில் TN 49 BS 2094 என்ற பதிவெண்ட கொண்ட Maruti Dzire காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று பிரகதீஸ்வரன் சென்ற வண்டியின் பின்னால் மோதியதில், அவருக்கு தலையில் அடிப்பட்டு அதன் மூலம் அவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

17. வழக்கு சம்பவத்தில் காயமுற்ற தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பிரகதீஸ்வரன் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால், அவருடன் இருந்த அவரது தம்பி அ.சா.1 விக்னேஷ்வரன் என்பவர் கடந்த 06.10.2024ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–12 மார்நாடு என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், கடந்த 05.10.2024ம் தேதி அ.சா.1இன் அண்ணன் பிரகதீஸ்வரன் என்பவர் TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் சொந்த வேலையாக கந்தர்வகோட்டை கடைத்தெருவிற்கு வந்துவிட்டு, திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கந்தர்வகோட்டை – தஞ்சாவூர் சாலையில் மாலை சுமார் 06.10 மணியளவில், காடவராயன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே மேற்படி இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது பக்கமாக வந்து கொண்டிருந்தபோது, அவரது பின்னால் மேற்படி அதே சாலை மற்றும் திசையில் தஞ்சாவூர் நோக்கி வந்த TN 49 BS 2094 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Dzire காரை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த கொண்ட தஞ்சாவூர் மாவட்டம், நீலக்கிரி மெடிக்கல் காலேஜ் ரோடு கிருஷ்ணா நகர், திருவள்ளுவர் தெருவைச் சேர்ந்த பட்டமுத்து மகன் முத்து ஆனந்தமுரளி என்பவர் காரை அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.1இன் அண்ணன் பிரகதீஸ்வரன் மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், அருகில் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருந்த அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் ஓடிச் சென்று மேற்படி பிரகதீஸ்வரனை தூக்கி பார்த்தபோது, தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் கிடந்ததாகவும், ஒரு போக்கு வண்டி மூலம் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், பின்னர் அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தாகவும் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

18. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ள விக்னேஷ்வரன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு விபத்தில் இறந்து போன பிரகதீஸ்வரன் தனது அண்ணன் என்றும், கடந்த 05.10.2024ம் தேதியன்று, கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு, திரும்பி ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாலை 06.10 மணியளவில், வந்து கொண்டிருந்தபோது, அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, கார் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து, எனது அண்ணன் வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், தனது அண்ணன் மேலே தூக்கி எறியப்பட்டார் என்றும், சம்பவம் நடைபெற்ற போது, தானும், சாட்சிகள் சூரியா மற்றும் சந்திரபாபு ஆகியோர் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், விபத்தில் தனது அண்ணனுக்கு தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், அந்த பக்கமாக வந்த, காரினை நிறுத்தி, முதலில் தனது அண்ணனை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொண்டு சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், அங்கு அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையில் இருந்தார் என்றும், அங்கு சிகிச்சையில் இருந்தபோது, போலிசார் அங்கு வந்து, தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், 06.10.2024ம் தேதி அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், பின்னர் மறுநாள் 07.10.2024ம் தேதி, போலிசார் தனது அண்ணனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தானும் உடன் இருந்தேன் என்றும், தன்னையும் விசாரித்தார்கள் என்றும், விபத்தை ஏற்படுத்திய Maruthi Suzuki dzire காரின் பதிவெண்ணை சம்பவத்தின் போது பார்த்தேன் என்றும், அந்த காரின் பதிவெண் TN 49 BS 2094 என்றும், தனது அண்ணன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 49 CH 9837 ஆகும்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

என்றும், சம்பவத்தின் போது, விபத்தினை ஏற்படுத்திய காரினை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன் என்றும், அவரைப் பார்த்தால் அடையாளம் காட்ட இயலும் என்றும், ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 சூரியா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 05.10.2024ம் தேதியன்று, தானும், அ.சா.1 விக்னேஷ்வரன் மற்றும் சந்திரபாபு ஆகியோர் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு, திரும்பி ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாலை 06.10 மணியளவில், வந்து கொண்டிருந்தபோது, அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, கார் அதிவேகமாக வந்து, பிரகதீஸ்வரன் வந்த வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், பிரகதீஸ்வரன் மேலே தூக்கி எறியப்பட்டார் என்றும், விபத்தினால் பிரகதீஸ்வரனுக்கு தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், அந்த பக்கமாக வந்த, காரினை நிறுத்தி, முதலில் பிரகதீஸ்வரனை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொண்டு சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், 06.10.2024ம் தேதி அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், மறுநாள் 07.10.2024ம் தேதி, போலிசார் பிரகதீஸ்வரனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தான் உடன் இருந்தேன் என்றும், விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவெண்ணை சம்பவத்தின் போது பார்த்தேன் என்றும், அந்த காரின் பதிவெண் TN 49 BS 2094 ஆகும் என்றும், அது என்ன நிறுவனத்தின் கார் என்று சரியாக ஞாபகம் இல்லை என்றும், சாட்சி தற்போது தாமாக Swift dzire என்று



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

கூறுகிறார் என்றும், சம்பவத்தின் போது, விபத்தினை ஏற்படுத்திய காரினை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன் என்றும், அவரை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட இயலும் என்றும், ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. மற்றொரு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 சந்திரபாபு என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு விபத்தில் இறந்து போன பிரகதீஸ்வரன் என்பவரை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தனக்கு தெரியும் என்றும், கடந்த 05.10.2024ம் தேதியன்று, தானும், அ.சா.1 விக்னேஷ்வரன் மற்றும் அ.சா.2 சூரியா ஆகியோர் காடவராயன் பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, பிரகதீஸ்வரன் கந்தர்வக்கோட்டையிலிருந்து, இருசக்கர வாகனத்தில் ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தை தாண்டிச் சென்ற போது மாலை 06.10 மணியளவில், அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, கார் அதிவேகமாக வந்து, பிரகதீஸ்வரன் வந்த வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், பிரகதீஸ்வரன் மேலே தூக்கி எறியப்பட்டார் என்றும், விபத்தினால் பிரகதீஸ்வரனுக்கு தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், அந்த பக்கமாக வந்த, காரினை நிறுத்தி, முதலில் பிரகதீஸ்வரனை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், தனக்கு மயக்கமாக இருந்ததால் தான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொண்டு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், 06.10.2024ம் தேதி, மதியம் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், சிகிச்சையில் இருந்த பிரகதீஸ்வரன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், சம்பவத்தின் போது, விபத்தினை ஏற்படுத்திய காரினை ஓட்டி வந்த நபரை பார்த்தேன் என்றும், அவரை பார்த்தால்



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.30 17:39:02 + 0530

தன்னால் அடையாளம் காட்ட இயலும் என்றும், ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் அ.சா.4 சுகுமாறன் தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் மார்நாடு கடந்த 06.10.2024ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பிரகதீஸ்வரன் என்பவர் மயக்க நிலையில் சிகிச்சையில் இருந்ததால் அவரது தம்பி, விக்னேஷ்வரன் என்பவரை விசாரித்து, அவரளித்த புகார் வாக்குமூலத்தையும் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.314/2024 சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS–ன் படி வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 2.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரமணி மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் விக்னேஷ்வரன், சூர்யா, சந்திரபாபு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 06.10.2024 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் வழக்கு விபத்தில் காயமுற்று சிசிக்சையில் இருந்த பிரகதீஸ்வரன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் அறிந்து வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) BNS லிருந்து பிரிவுகள் 281, 106(1) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும், அன்றைய தினமே தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த பிரகதீஸ்வரன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும், பின்னர் இறந்தவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக முதல்நிலைக்காவலர்



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

பாண்டிகுமார் என்பவர் மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்து, பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்க அறிவுறுத்தியுள்ளார் என்றும்,சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், 08.10.2024 ஆம் தேதி காலை 11.15 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி முத்து ஆனந்த முரளி என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 49 BS 2094 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki Dzire என்ற காரை மற்றும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக தனது வசம் ஒப்படைத்தார் என்றும், தான் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தினை பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்ததில் முந்தைய உதவி ஆய்வாளரிடம் சொன்னதையே தன்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர், 04.11.2024 ஆம் தேதி புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனம் மற்றும் விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெய்சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன் என்றும், பின்னர் 04.11.2024 ஆம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று இறந்து போன பிரகதீஸ்வரன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அருள்மதி கண்ணன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்துள்ளார் என்றும், பின்னர் முதல்நிலைக்காவலர் பாண்டிகுமார் மற்றும் உதவி ஆய்வாளர் மார்நாடு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், வழக்கின் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக BNS பிரிவு 281, 106(1) இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.30 17:39:02 + 0530

22. எதிரி தரப்பில் வடிவுகரசி என்பவர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி தனது தாய் மாமா என்றும், கடந்த 01.10.2024 ஆம் தேதி காரைக்குடியில் தனது மாமா மகள் முத்துஹனுதர்ஷினி என்பவருக்கு குழந்தை பிறந்தது என்றும், தானும், தனது மாமா முத்து ஆனந்தமுரளி என்பவரும் 02.10.2024 ஆம் தேதி குழந்தையை பார்த்துவிட்டு 05.10.2024 ஆம் தேதி திரும்பினோம் என்றும், காரில் காரைக்குடியில் இருந்து புதுக்கோட்டை வழியாக தஞ்சாவூர் வந்து கொண்டு இருந்தோம் என்றும், மேற்படி சாலையில் தாங்கள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டு இருந்தபோது காடவராயன்பட்டி அருகில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ஹோண்டா இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், அதனால் அந்த நபர் மீது மோதாமல் இருக்க தனது மாமா காரில் திடீரென பிரேக் பிடித்ததால் கார் பாலக்கட்டை மீது மோதிவிட்டது என்றும், அதனால் காரின் முன்பக்க சீட்டில் அமர்ந்து இருந்த தனக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது என்றும், தானும், தனது மாமாவும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை சென்றோம் என்றும், அந்த நபர் டாக்சி மூலமாக மருத்துவமனை சென்றார் என்றும், அந்த சமயத்தில் வேறு யாரும் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை என்றும், தனது மாமாவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், தான் A to Z மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றும், அங்கு தான் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றும், மேற்படி மருத்துவமனையில் தனக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றினை தாக்கல் செய்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி விடுப்பு சான்று சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

23. அரசுத் தரப்பு வழக்கில், கடந்த 05.10.2024ம் தேதி மாலை சுமார் 06.10 மணியளவில், அ.சா.1இன் அண்ணனான இவ்வழக்கில் இறந்துபோன பிரகதீஸ்வரன் என்பவர் TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் கந்தர்வகோட்டை – தஞ்சாவூர் சாலையில் காடவராயன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே சாலை மற்றும் திசையில் TN 49 BS 2094



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

என்ற பதிவெண்ட கொண்ட Maruti Dzire காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று பிரகதீஸ்வரன் சென்ற வண்டியின் பின்னால் மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

24. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தினை பரிசீலனை செய்ததில், கடந்த 05.10.2024ம் தேதி அ.சா.1இன் அண்ணன் பிரகதீஸ்வரன் என்பவர் TN 49 CH 9837 என்ற பதிவெண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் சொந்த வேலையாக கந்தர்வகோட்டை கடைத்தெருவிற்கு வந்துவிட்டு, திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கந்தர்வகோட்டை – தஞ்சாவூர் சாலையில் மாலை சுமார் 06.10 மணியளவில், காடவராயன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது பக்கமாக வந்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த TN 49 BS 2094 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuk Dizer காரை ஓட்டி எதிரி முத்து ஆனந்தமுரளி என்பவர் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.1இன் அண்ணன் பிரகதீஸ்வரன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் ஓடிச் சென்று மேற்படி பிரகதீஸ்வரனை தூக்கி பார்த்தபோது, தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் கிடந்ததாகவும் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

25. அ.சா.1 தனது சாட்சியத்தில், வழக்கு விபத்தில் இறந்து போன பிரகதீஸ்வரன் தனது அண்ணன் என்றும், அவர் கடந்த 05.10.2024ம் தேதியன்று, கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு, திரும்பி ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாலை 06.10 மணியளவில், வந்து கொண்டிருந்தபோது, அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, காரினை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, தனது அண்ணன் வந்த இருசக்கர வாகனத்தில்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண்ணை குறிப்பிட்டும், எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியும் சாட்சியம் அளித்துள்ளார்.

26. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 சூரியா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 05.10.2024ம் தேதியன்று, தானும், அ.சா.1 விக்னேஷ்வரன் மற்றும் சந்திரபாபு ஆகியோர் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அ.சா.1,ன் அண்ணனான பிரகதீஸ்வரன் என்பவர் கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு, திரும்பி ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாலை 06.10 மணியளவில், வந்து கொண்டிருந்தபோது, அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, காரினை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து, பிரகதீஸ்வரன் வந்த வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண்ணை குறிப்பிட்டும் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியும் சாட்சியம் அளித்துள்ளார்.

27. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 சந்திரபாபு என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு விபத்தில் இறந்து போன பிரகதீஸ்வரன் என்பவரை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தனக்கு தெரியும் என்றும், கடந்த 05.10.2024ம் தேதியன்று, தானும், அ.சா.1 விக்னேஷ்வரன் மற்றும் அ.சா.2 சூரியா ஆகியோர் காடவராயன் பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, பிரகதீஸ்வரன் கந்தர்வக்கோட்டையிலிருந்து, இருசக்கர வாகனத்தில் ஊருக்கு வருவதற்காக, தஞ்சாவூரில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில், தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, சாலையின் இடது புறமாக, காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தை தாண்டிச் சென்ற போது மாலை 06.10



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

மணியளவில், அதே சாலையில் அவருக்கு பின்னால் வந்த, காரினை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து, பிரகதீஸ்வரன் வந்த வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண்னை குறிப்பிட்டும் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியும் சாட்சியம் அளித்துள்ளார்.

28. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் கடந்த 05.10.2024ம் தேதி மாலை 6.10 மணியளவில், மூவரும் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக சென்றிருந்த அ.சா.1ன் அண்ணனான பிரகதீஸ்வரன் என்பவர் ஊருக்கு திரும்பி வருவதற்காக புதுக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் அதே திசையில் எதிரி ஓட்டி வந்த காரினை அதிவேமாகமாவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து பிரகதீஸ்வரன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 விக்னேஷ்வரன் என்பவர் வழக்கு விபத்தில் இருந்துபோன பிரகதீஸ்வரன் என்பவரின் தம்பியாவார். அ.சா.2 மற்றும் அ.சா3 அவரது நண்பர்கள் ஆவார்கள். வழக்கு விபத்து சமயத்தில் மேற்படி மூவரும் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக் கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி மூவரும் தற்செயலான சாட்சிகள் (Chance Witness) மற்றும் ஆர்வமுள்ள சாட்சிகள் (Interested Witness) ஆவார்கள். சாட்சிகள் தற்செயலான சாட்சிகள் அல்லது வழக்கில் ஆர்வமுள்ள சாட்சிகளாக இருப்பதால் மட்டுமே அவர்களது சாட்சியத்தை முற்றிலுமாக ஒதுக்க இயலாது. அவர்கள் சாட்சியம் நம்பத்தகுந்ததாக உள்ளதா என்பதை நீதிமன்றம் சற்று கூடுதலாக பரிசீலனை செய்ய வேண்டும் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்ட சட்ட விதியாகும்.

29. அரசுத் தரப்பு வழக்கு மற்றும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும் வழக்கு சம்பவம் மாலை 6.10 மணியளவில் நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.3



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

வரையிலான சாட்சிகளும் வழக்கு விபத்து சம்பவம் மாலை 6.10 மணியளவில் நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். வழக்கு விபத்து சம்பவத்தில் காயமுற்ற பிரகதீஸ்வரன் ஒரு போக்கு வண்டி மூலம் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாக அரசுத் தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி மருத்துவமனையில் பிரகதீஸ்வரனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேடு அரசுத் தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றபோதிலும், மேற்படி ஆவணம் வழக்கு கோப்பில் ஒரு பகுதி என்பதால் அதனை பரிசீலனை செய்வதில் எவ்வித தடையும் இல்லை. மேற்படி விபத்து பதிவேட்டில் பிரகதீஸ்வரன் மாலை 06.13 மணிக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், விபத்து பதிவேட்டில் வழக்கு விபத்து சம்பவம் மாலை 05.50 மணியளவில் நடைபெற்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தை துல்லியமாக குறிப்பிடுவதற்கு வாய்ப்பில்லை என்ற போதிலும், இவ்வழக்கில் புகார் வாக்குமூலத்திலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்திலும் வழக்கு விபத்து சம்பவம் மாலை 6.10 மணிக்கு நடைபெற்றதாக துல்லியமாக சாட்சியம் அளித்துள்ளதால் மருத்துவமனையில் விபத்திற்குள்ளான நபர் மாலை 6.13 மணிக்கு சேர்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

30. அரசுத் தரப்பு வழக்கிலும், புகார் வாக்குமூலத்திலும் வழக்கு விபத்து சம்பவம் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில், வழக்கு விபத்து சம்பவம் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3 தனது சாட்சியத்தில், இறந்துபோன பிரகதீஸ்வரன் இருசக்கர வாகனத்தில் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தை தாண்டி சென்றபோது விபத்து நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் இறந்துபோன



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

பிரகதீஸ்வரன் கந்தர்வக்கோட்டைக்கு சொந்த வேலையாக சென்றுவிட்டு திரும்பி ஊருக்கு வருவதற்காக வந்து  கொண்டிருந்தபோது விபத்து நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், இறந்துபோன பிரகதீஸ்வரன் காடவராயன்பட்டி கீழத்தெருவில் வசித்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து கீழத்தெருவிற்கு சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும் என்றும், புதுக்கோட்டை தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் இடது பக்கத்தில் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தமும், வலது பக்கத்தில் கீழத்தெருவும் உள்ளது என்றும், புதுக்கோட்டையிலிருந்து கீழத்தெரு செல்ல வேண்டுமென்றால் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு முன்பாக 20 மீட்டர் தொலைவில் வலது புறம் திரும்ப வேண்டுமென்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இறந்துபோன பிரகதீஸ்வரன் வசித்து வந்த கீழதெருவிற்கு செல்வதற்கு காடவரயானபட்டி பேருந்து நிறுத்தத்திற்கு முன்பாக 20 மீட்டர் தொலைவில் வலது புறமாக திரும்ப வேண்டும் என்பது தெரிய வருகிறது. அரசுத் தரப்பு வழக்கில் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே விபத்து நடைபெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு 20 மீட்டர் தொலைவிற்கு முன்பாக வலது புறமாக திரும்ப வேண்டிய பிரகதீஸ்வரன் எதற்காக அதனை தாண்டி காடவரயன்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு சென்றார் என்பது குறித்து அரசுத் தரப்பில் உரிய விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. மேலும், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தில் கந்தர்வக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் காடவராயன்பட்டி பேருந்து நிறுத்தத்தைத் தாண்டி 35 அடி தொலைவில் வழக்கு விபத்து சம்பவம் நடைபெற்றதாக சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது அரசுத் தரப்பு வழக்கிற்கும், புகார் வாக்குமூலத்திற்கும் முற்றிலும் முரணாக அமைந்துள்ளது. மேற்படி சூழ்நிலைகளும் அரசுத் தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

31. அ.சா.ஆ.7 விபத்து ஏற்படுத்திய காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் படி காரில் கீழ்கண்ட சேதங்கள் இருந்துள்ளது.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

**<u>சேதங்கள்</u>**

1. Front bumper, grill, bannet damaged.
2. Front righ side head light assembly broken.
3. Front radiator damaged.
4. Front wind screen glass broken
5. Right side front wheel assembly broken.
6. Right side front body and door damaged.
7. Brake system and steering system damaged.
8. Left side rear see mirror broken
9. Left side front body and door damaged

32. அரசுத் தரப்பு வழக்கில் கார் இருசக்கர வாகனத்தில் மோதியதாக கூறப்பட்டுள்ள நிலையில், விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் காரில் மேற்கண்ட சேதங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கு அரசுத் தரப்பு வழக்கிலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்திலும் உரிய விளக்கங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் எ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ள வடிவுகரசி என்பவர் தனது சாட்சியத்தில், எதிரி தனது தாய் மாமா என்றும், கடந்த 05.10.2024ம் தேதி காரைக்குடியிலிருந்து புதுக்கோட்டை வழியாக தஞ்சாவூர் செல்வதற்காக சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, காடவரயன்பட்டி அருகில் கிழக்கிலிருந்த தெற்கு நோக்கி Honda இருசக்கர வாகனத்தில் வந்த நபர் காரில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அந்த நபர் மீது மோதாமல் இருப்பதற்காக தனது மாமா திடீரென பிரேக் பிடித்ததால் கார் பாலக்கட்டை மீது மோதியதில் காரின் முன்பக்க சீட்டில் அமர்ந்திருந்த தனக்கு மூக்கில் காயம் ஏற்பட்டதாகவும், தானும், தனது மாமாவும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை சென்றதாகவும், தான் A to Z மருத்துவமனையில் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி மருத்துவமனையில் அவருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், எதிரியின் வாகனத்தில் இரண்டு நபர்கள் பயணம் செய்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், எ.சா.1 விபத்து சமயத்தில் எதிரியுடன் காரில் பயணம் செய்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தோடு மேற்படி காருக்கு ஏற்பட்ட சேதங்கள் பொருந்துவதாக அமைந்துள்ளது. அரசுத் தரப்பு வழக்கிலும், புகார் வாக்குமூலத்திலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்திலும் வழக்கு விபத்து சம்பவத்திற்கு பின்பு எதிரியின் கார் பாலக்கட்டையில் மோதியதாக கூறப்படவில்லை. அரசுத் தரப்பு வழக்கில் மேற்படி பொருண்மை எதற்காக மறைக்கப்பட்டது என்பது குறித்து உரிய விளக்கங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை.

33. அ.சா.ஆ.8 விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி இருசக்கர வாகனத்தில் கீழ்கண்ட சேதங்கள் இருந்துள்ளது.

**சேதங்கள்**

1. Front right side body damaged.
2. Front head light and left side indicator light
3. Left side body damaged.
4. Rear number plate bend.

34. அரசுத் தரப்பு வழக்கில் எதிரி ஓட்டி வந்த கார் இருசக்கர வாகனத்தின் பின்னால் அதிவேகமாக வந்து மோதியதாக கூறப்பட்டுள்ள நிலையயில், மோட்டார் வாகன ஆய்வறிக்கையின்படி இருசக்கர வாகனத்தின் பின்புறம் சேதங்கள் எதுவும் இல்லை. மேலும், இருசக்கர வாகனத்தின் வலது மற்றும் இடது பக்க பகுதிகள் சேதம் அடைந்திருந்ததாகவும், முன்புற விளக்கு மற்றும் வலது பக்க சைகை விளக்கு சேதம் அடைந்திருந்ததாகவும் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கார், இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதி இருக்கும் பட்சத்தில், இருசக்கர வாகனம் வலது பக்கம் அல்லது இடது பக்கம் கீழே விழுந்து ஏதேனும் ஒரு பக்கத்தில் உள்ள



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

பாகங்கள் சேதமடைந்திருக்க வாய்ப்புள்ளது. ஆனால், மேற்படி இருசக்கர வாகனத்தில் வலது மற்றும் இடது பக்க பாகங்கள் சேதமடைந்திருப்பது, எதிரியின் கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் கார் மோதியதாக எ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

35. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் வழக்கு விபத்து சம்பவம் குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், மேற்கண்டவாறு அரசுத் தரப்பில் ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் மற்றும் முரண்பாடுகளால் அவர்களின் சாட்சியம் சந்தேகத்திற்குரியதாக அமைந்துள்ளது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Harbeer Singh VS Sheeshpal and Ors (AIR 2016 SC 4958) என்ற வழக்கில்,

> "11. It is a cardinal principle of criminal jurisprudence that the guilt of the accused must be proved beyond all reasonable doubt. The burden of proving its case beyond all reasonable doubt lies on the prosecution and it never shifts. Another golden thread which runs through the web of the administration of justice in criminal cases is that if two views are possible on the evidence adduced in the case, one pointing to the guilt of the accused and the other to his innocence, the view which is favourable to the accused should be adopted."

என்று அரசுத் தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய வேண்டும் என்பது குற்றவியல் நீதித்துறையின் அடிப்படை கொள்கை என்றும், வழக்கில் அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் அடிப்படையில் இரண்டு விதமான கருத்துக்கள் உருவாகும் நிலையில், ஒன்று குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளி என்பதை காட்டுவதாகவும், மற்றொன்று அவர் நிரபராதி என்பதை காட்டுவதாகவும் இருந்தால் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சாதகமாக கருத்தையே நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது குற்றவியல் வழக்குகளின் நீதி நிர்வாகத்தின் அடிப்படை



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

கோட்பாடுகளில் ஒன்று என்றும் தீர்மானித்துள்ளது இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்துவதாக அமைந்துள்ளது.

36. இவ்வழக்கில் அசா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளி என்பதை காட்டுவதாக அமைந்துள்ள போதிலும், மேற்படி சாட்சிகள் தற்செயலான மற்றும் ஆர்வமுள்ள சாட்சிகள் என்பதாலும், மேற்கண்டவாறு அரசுத் தரப்பு வழக்கில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அளவில் சந்தேகங்கள் எழுவதாலும், அவை எதிரியை நிரபராதி என்பதை காட்டுவதாக அமைந்துள்ளதால், மேற்படி அடிப்படை கோட்பாட்டின்படி எதிரிக்கு சாதகமான கருத்தையே நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதால் , அரசுத் தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**37. முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 281, 106(1) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை குவிமுச பிரிவு 278(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

38. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 30.06.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. விக்னேஷ்வரன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. சூரியா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. சந்திரபாபு | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. சுகுமாறன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.03.2026 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 15.05.2026 | கணினி முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | 15.05.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 15.05.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 15.05.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 15.05.2026 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 15.05.2026 | விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | 15.05.2026 | விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | 15.05.2026 | பிரேத பரிசோதனை அறிக்கை | |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சி:-**

| எதிரி தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| எ.சா.1 | திருமதி. வடிவுகரசி | 3ம் தரப்பினர் |

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:-**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1 | 04.06.2026 | தஞ்சாவூர் A to Z மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று (Discharge summary) | எ.சா.1 |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:** - இல்லை.

**குறிப்பு**

1. எதிரி 08.10.2024 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.30 17:39:02 + 0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**